ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ திருமந்திரச்சுருக்கு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ திருமந்திரச்சுருக்கு ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡நாவலர் மறை நால் ஒன்றும்⋆ நலந் திகழ் மறை ஒன்றோராது⋆
ஆவலிப்பலைக்கு மோகத்து⋆ அழுந்தி நின்றலமர்கின்றீர்⋆
தூ வலம் புரியாம் ஒன்றில்⋆ துவக்கமாம் வண்ணம் ஒன்றால்⋆
காவல் என்றகரத்தவ்வாய்க்⋆ கருத்துறக் காண்மினீரே (1)

இளக்கம் இல் மயக்கம் தன்னால்⋆ எனக்கு யான் உரியன் என்னும்⋆
களக் கருத்தொன்றே கொண்டு⋆ கடு நரகடைந்து நின்றீர்⋆
விளக்கும் அவ்வெழுத்தின்⋆ நாலாம் வேற்றுமை ஏற்றி வாங்கித்⋆
துளக்கம் இல் அடிமை பூண்டு⋆ தூயராய் வாழ்மினீரே (2)

அப்பொருள் இகந்து மற்றும்⋆ அழித்தழிந்தெழுவார் தாளில்⋆
இப்பொருள் இகந்தவன் பால்⋆ இரங்கினிர் வணங்கி வீழ்ந்தீர்⋆
உப்பொருள் உள்ளி⋆ மற்றோர் உயிர் தனக்குரிமை மாற்றி⋆
எப்பொருள் பயனும் ஈதென்று⋆ எண்ணினிர் எழுமினீரே (3)

என்றும் ஓர் ஏதம் இன்றி⋆ இரவியும் ஒளியும் போல⋆
ஒன்றி நின்றுலகளிக்கும்⋆ உகம் இகந்தடிமை வைத்தீர்⋆
ஒன்று மூன்றெழுத்தாய் ஒன்றும்⋆ ஒன்றில் ஒன்றுடைய முன்னே⋆
ஒன்றிய இரண்டை உள்ளி⋆ உளர் என உய்ம்மினீரே (4)

தத்துவம் அறுநான் கோடு⋆ தனி இறை அன்றி நின்ற⋆
சித்தினை உணராதென்றும்⋆ திரள் தொகையாகி நின்றீர்⋆
மத்தனைத் தனி விடாதே⋆ மையிலா விளக்கம் ஆக்கி⋆
உத்தமன் அடிமையான⋆ உயிர் நிலை உணர்மினீரே (5)

www.prapatti.com

தனதிவை அனைத்தும் ஆகத்⋆ தான் இறையாகும் மாயன்⋆
உனதெனும் உணர்த்தி தாராது⋆ உமக்கு நீர் உரிமை உற்றீர்⋆
எனதிவை அனைத்தும்⋆ யானே இறை எனும் இரண்டும் தீர⋆
மந எனும் இரண்டின்⋆ மாறா வல்வினை மாற்றுவீரே (6)

அழிவிலா உயிர்கட்கெல்லாம்⋆ அருக்கனாய் அழியா ஈசன்⋆
வழியலா வழி விலக்கும்⋆ மதி எழ மாய மூர்த்தி⋆
வழுவிலாதிவை அனைத்தும்⋆ வயிற்றில் வைத்துமிழ்ந்த மாலை⋆
நழுவிலா நார வாக்கில்⋆ நாடி நீர் நணுகுவீரே (7)

வயனம் ஒன்றறிந்துரைப்பார்⋆ வன் கழல் வணங்க வெள்கி⋆
நயனம் உள் இன்றி நாளும்⋆ நள் இருள் நண்ணி நின்றீர்⋆
அயனம் இவ்வனைத்துக்கும் தான்⋆ அவை தனக்கயனம் என்னப்⋆
பயனுமாய்ப் பதியுமான⋆ பரமனைப் பணிமினீரே (8)

‡உயர்ந்தவர் உணர்ந்த வாற்றால்⋆ உவந்த குற்றேவல் எல்லாம்⋆
அயர்ந்து நீர் ஐம் புலன் கட்கு⋆ அடிமை பூண்டலமர்கின்றீர்⋆
பயந்திவை அனைத்தும் ஏந்தும்⋆ பரமனார் நாமம் ஒன்றில்⋆
வியந்த பேரடிமை தோற்றும்⋆ வேற்றுமை மேவுவீரே (9)

‡எண் திசை பரவும் சீரோர்⋆ எங்களுக்கீந்த எட்டில்⋆
உண்டவாறுரைப்பார் போல⋆ ஒன்பது பொருள் உரைத்தோம்⋆
பண்டு நான் மறையோர் காக்கும்⋆ மா நிதி இவை அனைத்தும்⋆
கண்டவர் விள்ளார்⋆ விள்ளக் கருதுவார் காண்கிலாரே (10)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥



www.prapatti.com